மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

ஐ.ஏ.714/18 இன் ஐ.ஏ.308/07 இன் அ.வ.எண்.949/1989

ம.சா.1 கோகுலத்தம்மாள்

<u>26.11.2018</u> சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை:-</u> கந்தசாமிகவுண்டருக்கு வேலுச்சாமிகவுண்டர், கோகிலத்தம்மாள், சொக்கலிங்கம், மங்களகவுண்டர், வஞ்சிநாயகி ஆகியோாகள் வாரிசுகள். இறந்துபோன வேலுச்சாமிகவுண்டரின் மனைவியான வெங்கலலட்சுமிக்கு அன்னம்மாள் என்ற ஒரு சகோதரி மட்டுமே உள்ளார். இறந்துபோன வேலுச்சாமிக்கவுண்டர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ளார். வேலுச்சாமி கவுண்டர் தான் இறக்கும்வரை நிரந்தரமாக பழனியில்தான் வசித்து வந்தார். அவர் நல்ல திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் நல்ல மனநிலையில்தான இறக்கும்வரை இருந்தார் என்றால் சரிதான். எனக்கு 1959 ல் திருமணம் நடந்தது. எனக்கு ஒரு மகனும் மூன்று பெண்களும் உள்ளனர். என்னுடைய மகன் தேதவசேனாபதி என்பவர் பொள்ளாச்சியில் வழக்கறிஞராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். சொக்கலிங்கவுண்டர் மகன் ராஜா என்பவர் கோயமுத்தூரில் வழக்கறிஞராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். வேலுச்சாமிக்கவுண்டர், வெங்குலட்சுமி ஆகியோருடன் இறந்தபின்பு அவருடைய இறுதிச்சடங்குகளை ராஜாதான் செய்தார் என்றால் சரிதான். ராஜா வேலுச்சாமிகவுண்டரின் சகோதரரான சொக்கலிங்ககவுண்டரின் மகன் என்றால் சரிதான். முதலில் வேலுச்சாமிகவுண்டரின் மனைவிதான் இறந்தார். அதன்பின்புதான் வேலுச்சாமிக்கவுண்டர் இறந்தார் என்றால் சரிதான். மனைவி இறந்து 13 வது நாளில் கணவர் இறந்துவிட்டார். வேலுச்சாமிகவுண்டரும் அவர் மனைவியும் பழனி சேரன் ஜீவா நகரில்தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். வேலுச்சாமிகவுண்டரையும் அவர் மனைவியையும் ராஜாதான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. இறக்கும்போது வேலுச்சாமிக்கவுண்டரின் வயது 80. வேலுச்சாமிகவுண்டர் இறக்கும்வரை அவர் வீட்டுக்கு நான் வந்து போக இருந்தேன் என்றால் சரிதான். உடல்நிலை சரியில்லை என்றால் அவர் என்னைத்தான் கூப்பிடுவார். வேலுச்சாமிகவுண்டர் எந்த கதவு எண்ணில், எந்த தெருவில் குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. தெருவின் பெயரும், கதவு எண்ணும் எனக்கு தெரியாது. இறந்துபோன வேலுச்சாமிக்கவுண்டருக்கு என்னுடைய முகவரி தெரியும். உயிலில் என்னுடைய முகவரியை வேலுச்சாமிக்கவுண்டர் எழுதியுள்ளார். உயிலில் எனது முகவரியை எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. உயிலில் என்னுடைய முகவரியை சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியிருப்பார்கள். வேலுச்சாமிகவுண்டர் இறந்த மறுநாளே உயில் எனது கைக்கு வந்துவிட்டது. உயிலில் கண்டுள்ள சொத்து விபரங்களைப் பற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதிவைத்தது எனக்கு நேரடியாக தெரியும். உயில்நான் சொல்லி எழுதி வைத்தது என்றால் சரியல்ல. உயில் எத்தனை ரூபாய் பேப்பரில் எழுதப்பட்டுள்ளது என்றால், இண்டு 10 ரூபாய் பேப்பர்களிலும் இரண்டு வெள்ளை பேப்பர்களிலும் எழுதப்பட்டது. உயிலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாகமில்லை. உயில் எந்த கலர் மையால் எழுதப்பட்டது என்ற எனக்கு தெரியாது. உயில் பத்திரம் எங்கு வாங்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரம் எந்த பத்திர விற்பனையாளரிடம் வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. எந்த தேதியில் பத்திரம்

வாங்கப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. வேலுச்சாமிக்கவுண்டர் உயில் எழுதிவைத்தவுடன் அந்த சொத்துக்களுக்கு நான் வில்லங்கம் போட்டுப்பார்த்தேனா என்றால் இல்லை. உயிலில் எழுதப்பட்டுள்ள சொத்துக்களில் சில சொத்துக்களை வேலுச்சாமிக்கவுண்டர் விற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வேலுச்சாமிக்கவுண்டருக்குப் பாத்தியம் இல்லாத சொத்துக்களையும் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வேலுச்சாமிக்கவுண்டருக்கு சுமார் 2 லட்சம் வரை கடன் உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. உயிலலல் யார் சா்ட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், தென்னரசு என்ற வழக்கறிஞர் இன்னொருவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. தென்னரசு என்பவரின் முகவரி எனக்கு தெரியுமா என்றால், தாராபுரத்தில் உள்ளார். ஆனால் முகவரி தெரியாது. உயிலில் 2 வது பக்கத்தில்தான் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், கடைசி பக்கத்தில் சாட்சிகள் கையெழுத்து இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. உயிலில் சாட்சி கையெழுத்து செய்துள்ள மற்றொரு நபரை எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. உயிலில் பக்கம் 4 ல் நால்வார் பாகவிஸ்தியில் வரும் சொத்து விபரத்தில் பச்சை மையால் ஏக்கர் 1 செண்டு 26 13/16 ல் பொதுவாக 4 ல் ஒரு பாகம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலுச்சாமிக்கவுண்டருக்கு எந்த வகையில் பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். தாவாச்சொத்து சம்மந்தமாக என் அம்மச்சி கிரையம் செய்துகொடுத்துவிட்டார். அந்த கிரையம் செல்லாது என அப்பா வழக்கு போட்டு அநத் வழக்கு உயர்நீதிமன்றம் வரை சென்றது. அந்த வழக்கில் என் அம்மச்சி உயிருடன் இருக்கும்வரை செல்லும் என்றும், அவர் இறந்தபின்பு அந்த சொத்து என் அம்மாவுக்கு வந்தது. அவர் மூலம் எனது அண்ணனுக்கு வந்தது. உயிலில் பிரதிவாதிகளுக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுச்சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால், பதிவு செய்யவில்லை. பதிவு செய்யப்படவேண்டும் என்று எனக்கு தெரியாது. பழனியில் ராஜா வழக்கறிஞர் வீட்டுக்கு அருகில்தான் பதிவு அலுவலகம் இருந்தது என்றால் சரிதான். உயிலில் ஒவ்வொரு பக்கத்திலும் சாட்சிகள் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. உயிலை நான் வழக்கில் வேலுச்சாமிகவுண்டர் இறந்தவுடனே தாக்கல் செய்யவில்லை என்றும், 97 நாட்கள் கழித்துத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். உயிலில் சாட்சி கையெழுத்து செய்துள்ள தென்னரசு எனக்கு உறவினர் என்றால் சரிதான். உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கான மூல ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவாச்சொத்துக்கு ஆசைப்பட்டு மோசடியாக உயிலை தயார் செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.